# முதல் இடைத் தேர்வு - 2023

## தமிழ்

வகுப்பு: 10
காலம் : 1.30 மணி

பதிவு எண் :
மொத்த மதிப்பெண்கள் : 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 7x1=7

1. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது யாது ?.
   அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
   இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
2. "உனக்கு பாட்டுகள் பாடுகிறோம்
   உனக்கு புகழ்ச்சிகள் கூறுகிறோம்" – பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை ?
   அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இணைபு ஈ) உவமை, எதுகை
3. "பாடு இமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் யாது ?
   அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
   இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
4. பெயரெச்சத் தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக
   அ) கேட்ட பாடல் ஆ) பாடி மகிழ்ந்தனர் இ) நண்பா எழுது. ஈ) பாடினாள் கண்ணகி
5. காசிக்காண்டம் என்பது ..............................................
   அ) காசி நகரத்தின் வரலாற்றை பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
   இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்
6. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள்
   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
7. உனதருளே பார்ப்பன் அடியேனே – யாரிடம் யார் கூறியது ?
   அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
   இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

**II. எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (11வது வினா கட்டாயம்)** 3x2=6

8. 'வேங்கை' என்பதைத் தொடர் மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
9. வசன கவிதை – குறிப்பு எழுதுக.
10. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
11. முயற்சி .................. என தொடங்கும் திருக்குறளை எழுதுக.
12. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

**III. எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 3x2=6

13. கலைச்சொல் தருக.
    அ) Vowel ஆ) Land Breeze
14. பொறித்த – என்ற சொல்லுக்கு பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.
15. பழமொழிகளை நிறைவு செய்க.
    அ) உப்பில்லாப் ..............................................
    ஆ) அளவுக்கு ..............................................
16. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    அ) சிலை – சீலை ஆ) மலை – மாலை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

17. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க
அ) இன்சொல்

**IV. எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.(18வது வினா கட்டாயம்)** 2x3=6

18. அன்னை மொழியே! எனத் தொடங்கும் பாடலை எழுதுக.
19. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.
20. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்திலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது ?

**V. எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்** 2x3=6

21. அ) வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலொடு நின்றான் இரவு – என்ற குறளில் இடம் பெறும்அணியை விளக்குக.
(அல்லது )
ஆ) எடுத்துக்காட்டு உவமையணியை குறள் எழுதி விளக்குக.

22. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

23. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

**VI. எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 3x4=12

24. மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

25. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



26. புயலின் போது நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

27. மொழி பெயர்த்து எழுதுக.

The Golden sungets up early in the morning and starts its bright rays to fade away the dark. The Milky clouds star their wandering. The colourful birds start twitting their morning melodies in persussion. The cute butterflies dance around the flowers.

**VII. விரிவான விடையளிக்கவும்.** 1x7=7

28. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.
( அல்லது )
ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

--------


Kindly send me your study materials to padasalai.net@gmail.com